# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

பாடம் 8

## நவீன பயன்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டு சகாப்தங்கள்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1
சகாப்த பிரிவுகள் ........ 2
வகை ........ 3
உருவரை ........ 5
தாக்கங்கள் ........ 7
சகாப்த முன்னேற்றங்கள் ........ 12
பாத்திரங்கள் ........ 13
கதைக்களம் ........ 16
எழுத்தாளர்கள் ........ 18
கடந்த காலத்தைப் பற்றி ........ 19
நிகழ் காலத்திற்கு ........ 20
தொடர்புகள் ........ 23
பின்னணிகள் ........ 23
மாதிரிகள் ........ 24
எதிர்பார்ப்புகள் ........ 28
முடிவுரை ........ 29



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

பழைய ஏற்பாட்டை நவீன வாழ்க்கைக்கு பயன்படுத்துவது பற்றி சிந்திக்கும்போது கிறிஸ்தவர்கள் ஒரு அளவுக்கு மேல் செல்வதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவனுடைய மக்கள் என்ன செய்தார்களோ அதையே நாமும் செய்ய வேண்டும் என்று சில விசுவாசிகள் நினைக்கிறார்கள். மாறாக, பழைய ஏற்பாட்டு நாட்களில் தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிட்டதை நாம் வெறுமனே மறந்துவிட வேண்டும் என்று ஒரு சில விசுவாசிகள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில், சத்தியமானது இந்த இரண்டு உச்சங்களுக்கு இடையில் எங்கோ உள்ளது.

பழைய ஏற்பாட்டை இன்றைய நாளில் நாம் பயன்படுத்தும்போது, நாம் இரண்டு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும், அவையாவன: நாம் ஒருபோதும் கடந்த காலத்திற்குத் திரும்பக்கூடாது, ஆனால் கடந்த காலத்தை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

இது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்: வியாக்கியானம் செய்வதன் அடிப்படைகள்* என்கிற தொடரில் இது எட்டாவது பாடமாகும். நாம் இதற்கு ”நவீன பயன்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டு சகாப்தங்கள்” என்று தலைப்பிட்டுள்ளோம். இந்தப் பாடத்தில், பழைய ஏற்பாட்டு கோட்பாடுகள் வரலாற்றின் பெரும் யுகங்கள் அல்லது சகாப்தங்களில் வளர்ந்த வழிகளை ஆராய்வோம், மேலும் இந்த வளர்ச்சிகள் வேதாகமத்தின் நமது பயன்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குவோம்.

வேதாகமத்தின் முதல் வாசகர்கள் இந்தக் கால வாசகர்களிடமிருந்து குறைந்தது மூன்று வழிகளில் வேறுபடுகிறார்கள் என்பதை முந்தைய பாடத்தில் பார்த்தோம். அசல் வாசகர்கள் நம்மை விட வெவ்வேறு வரலாற்று சகாப்தங்களில் வாழ்ந்தனர். அவர்களின் கலாச்சாரங்கள் நமது கலாச்சாரங்களிலிருந்து வேறுபட்டவை. அவர்கள் நம்மை விட வெவ்வேறு வகையான மக்கள். இந்த மூன்று வேறுபாடுகளும் எண்ணற்ற வழிகளில் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்றாலும், இந்த பாடத்தில் பழைய ஏற்பாட்டின் சகாப்தங்கள் மற்றும் அவை நவீன பயன்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பதில் நம் கவனத்தை செலுத்துவோம்.

நவீன பயன்பாட்டிற்கும் பழைய ஏற்பாட்டு சகாப்தங்களுக்கும் இடையிலான தொடர்பை இரண்டு வழிகளில் ஆராய்வோம். முதலில், பழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாட்டு வரலாற்றின் சகாப்தப் பிரிவுகளைப் பார்ப்போம். இரண்டாவதாக, இந்த பிரிவுகள் பிரதிநிதித்துவப்படுத்தும் சகாப்த வளர்ச்சிகளை நாம் கருத்தில் கொள்வோம். பழைய ஏற்பாட்டு வரலாற்றின் சகாப்தப் பிரிவுகளிலிருந்து தொடங்குவோம்.

# சகாப்த பிரிவுகள்

வரலாறு முழுவதும் நிகழ்ந்த பல இறையியல் மாற்றங்களைப் பற்றி பழைய ஏற்பாடு கூறுகிறது. ஒவ்வொரு முறையும் தேவன் தனது மக்களின் கருத்துக்கள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளைப் பற்றிய தனது எதிர்பார்ப்புகளை மாற்றும்போது இறையியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. மாற்றங்கள் போதுமான அளவு குறிப்பிடத்தக்கதாக இருந்தபோது, அவை சகாப்த பிரிவுகளை அடையாளம் காண்பதற்கான அடிப்படையாக மாறின.

கிறிஸ்தவர்கள் இந்த மாற்றங்களை பல வழிகளில் விவரித்துள்ளனர், ஆனால் ஒரு பொதுவான மற்றும் பயனுள்ள உவமை பழைய ஏற்பாட்டு இறையியலை வளர்ந்து வரும் மரத்துடன் ஒப்பிடுகிறது. ஒரு ஆரோக்கியமான மரம் ஒரு சிறிய விதையிலிருந்து முழு மரமாக வளரும்போது பல மாற்றங்களைச் சந்திக்கிறது. ஆனால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் மரங்களின் வளர்ச்சியானது வருடாந்திர வானிலை சுழற்சிகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. மரங்கள் குளிர்ந்த பருவங்களில் மெதுவாகவும், வெப்பமான பருவங்களில் விரைவாகவும் மாற்றம் அடைகின்றன.

பழைய ஏற்பாட்டு இறையியலின் வளர்ச்சியும் பருவகாலமாகவே இருந்தது. சில நேரங்களில் அது ஒப்பீட்டளவில் சிறியதாகவே மாறியது. ஆனால் மற்ற நேரங்களில் அது வியத்தகு முறையில் மாறி முதிர்ச்சியின் புதிய கட்டங்களை அடைந்தது. முதிர்ச்சியின் இந்த நிலைகள் பழைய ஏற்பாட்டின் சகாப்த பிரிவுகளுடன் ஒத்துப்போகின்றன. ஒவ்வொரு சகாப்தமும் பழைய ஏற்பாட்டு இறையியலில் கணிசமான மற்றும் நீண்டகால மாற்றங்களால் வகைப்படுத்தப்படும் காலகட்டமாகும்.

பழைய ஏற்பாட்டின் சகாப்தப் பிரிவுகளை மூன்று படிகளில் விவாதிப்போம். முதலாவதாக, வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்ட வரலாற்றை அறிஞர்கள் பல்வேறு வழிகளில் பிரித்துள்ளனர் என்பதை ஒப்புக்கொள்வோம். இரண்டாவதாக, பல கிறிஸ்தவ மரபுகள் பயன்படுத்தும் ஒரு பயனுள்ள சகாப்த சுருக்கத்தை நாம் விவரித்துப் பார்ப்போம். மூன்றாவதாக, வேதாகமத்தின் நவீன பயன்பாட்டில் இந்த வெளிப்பாடு ஏற்படுத்தும் சில

தாக்கங்களை சுட்டிக்காட்டுவோம். பழைய ஏற்பாட்டு வரலாறு எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பதில் இருந்து தொடங்குவோம்.

## வகை

பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட வரலாற்றைப் பிரிக்க இறையியலாளர்கள் வெவ்வேறு வழிகளைக் கண்டறிந்துள்ளனர் என்பதை அறிந்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஒன்று, கூர்மையாக பிரிக்கப்பட்ட காலகட்டங்களில் காலம் கடந்து செல்வதில்லை. எனவே, சகாப்தங்களுக்கிடையிலான மாற்றங்கள் பொதுவாக படிப்படியாக நடந்தன, மேலும் சகாப்தங்களே பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருந்தன. மற்றொரு விஷயம் என்னவென்றால், இறையியலாளர்கள் உருவாக்கிய பிரிவுகள் அவர்கள் பயன்படுத்தும் அளவுகோல்களைப் பொறுத்தது. அறிவியலில் இது நடக்கும் விதத்தைப் பற்றி சிந்திக்கவும். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் உலோகவியலின் வளர்ச்சிகளுக்கு ஏற்ப வரலாற்றைப் பிரிக்க முனைகிறார்கள். எனவே, அவர்கள் ஆரம்ப, நடுத்தர மற்றும் பிந்தைய வெண்கல காலத்தைப் பற்றியும் ஆரம்ப, நடுத்தர மற்றும் பிந்தைய இரும்பு காலத்தைப் பற்றியும் பேசுகிறார்கள். சமூகவியலாளர்கள் அரசியல் வளர்ச்சிகளை வலியுறுத்துகின்றனர். எனவே, அவர்கள் பழங்குடி காலம், ஆரம்ப தேசிய காலம், அரசாட்சிக் காலம், சிறைக் காலம் மற்றும் பிந்தைய சிறைக் காலம் ஆகியவற்றைப் பற்றி பேசுகிறார்கள்.

இதேபோல், இறையியலாளர்கள் சகாப்தங்களை வரையறுக்க இறையியல் அளவுகோல்களைப் பயன்படுத்த முனைகிறார்கள். ஆனால் பழைய ஏற்பாட்டில் உள்ள இறையியல் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வழிகளில் வளர்ந்ததால் அவர்கள் இன்னும் பிளவுகளில் உடன்படவில்லை. ஒரு மரம் வளர்ச்சியின் கட்டங்களைக் கடக்கும்போது, அதன் வெவ்வேறு பாகங்கள் ஒரே நேரத்தில் அல்லது ஒரே வேகத்தில் வளர்வதில்லை. சில நேரங்களில் நோயானது ஒரு கிளையின் வளர்ச்சியைத் தடுக்கும், ஆனால் மற்றவை நன்றாக வளரும். ஒரு மரத்தினுடைய தண்டுகளின் பட்டை மெதுவாகவும் தெளிவாகவும் வளரக்கூடும், மேலும் அதன் சிறிய கிளைகள் மற்றும் இலைகள் ஒப்பீட்டளவில் விரைவாக வளரக்கூடும். இதேபோல், பழைய ஏற்பாட்டு இறையியலின் சில பகுதிகள் மெதுவாக முன்னேறின, மற்றவை நடுத்தர வேகத்தில் முன்னேறின, மற்றவை வேகமாக மாறின. இவற்றில் பல பாகங்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வளர்ந்தன. இஸ்ரவேலின் விசுவாசத்தின் ஒவ்வொரு அம்சமும் ஒரே வேகத்தில், ஒரே நேரத்தில் மாறியிருந்தால், அதன் பிளவுகளை ஒப்புக்கொள்வது வியாக்கியான அறிஞர்களுக்கு எளிதாக இருந்திருக்கும். ஆனால், பழைய ஏற்பாட்டு வரலாற்றை இறையியலாளர்கள் பல்வேறு வழிகளில் பிரித்துள்ளனர்.

வேதாகமம் ஒரு முற்போக்கான வெளிப்பாடாகவும் அது காலப்போக்கில் நமக்கு வந்துவிட்டதுமாகையால், தேவனுடைய பரந்த திட்டத்தில் நாம் எங்கே இருக்கிறோம் என்பதை சரியாக அறிவது முக்கியம். இறையியலாளர்கள் பெரும்பாலும் தேவனுடைய திட்டத்தை பல்வேறு சகாப்தங்களாகவும் காலப்பிரிவுகளாகவும் பிரிப்பது பற்றி பேசுகிறார்கள்… புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை எவ்வாறு பிரிக்கிறது என்பதற்கு புதிய ஏற்பாட்டில் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. மத்தேயுவின் வம்சாவளியைப் பற்றி நீங்கள் நினையுங்கள். இது ஆபிரகாமில் தொடங்கி தாவீது மூலம், ஆபிரகாமிலிருந்து தாவீது வரை, தாவீதிலிருந்து இஸ்ரவேலர் சிறைப்பிடிக்கப்பட்ட காலம் வரை மற்றும் இஸ்ரவேலர் சிறைப்படிக்கப்பட்ட காலம் முதல் கிறிஸ்து வரை என இது பழைய ஏற்பாட்டு வரலாற்றைப் பார்க்கிறது. பழைய ஏற்பாட்டின் தனித்துவமான முக்கியத்துவத்தையும் பின்னர் அது நம்மிடம் எவ்வாறு வருகிறது என்பதையும் கண்டு பழைய ஏற்பாட்டு வரலாற்றை வேதம் பிரிக்கிறது. புதிய ஏற்பாடு வேறு வழிகளில் பிரிகிறது. ரோமர் 5, மற்றும் 1 கொரிந்தியர் 15 இல் பவுலைப் பற்றி நினைத்துப் பார்க்கவும். நியாயப்பிரமாணத்திற்கு முன்னும் பின்னும் ஆதாமைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் நீங்கள் பேச முடியும். எனவே, புதிய ஏற்பாடு இதைச் செய்ய பல வழிகளைக் காட்டுகிறது. தேவனுடைய முழு ஆலோசனையையும் பிரதிபலிக்கும் போது, நாம் இதைச் செய்யக்கூடிய ஒரு முக்கியமான வழி வேதாகம உடன்படிக்கைகள் என்று நான் நினைக்கிறேன். ஆதாம், சிருஷ்டிப்பு உடன்படிக்கை, நோவா, ஆபிரகாமிய உடன்படிக்கை, இஸ்ரவேலருடன் தொடர்புடைய பழைய உடன்படிக்கை மற்றும் மோசே, தாவீதுடனான உடன்படிக்கை, பின்னர் புதிய உடன்படிக்கையின் எதிர்பார்ப்பு ஆகியவற்றின் வழியாக நீங்கள் நடந்து செல்வது சுவாரஸ்யமான ஒன்றாகும், இது அடுத்த உடன்படிக்கைக்கு வழிவகுத்து இறுதியில் இயேசு கிறிஸ்துவில் அதன் உச்சக்கட்டத்திற்கு வழிவகுக்கும் என்று நான் நினைக்கிறேன். ஆதியாகமத்திலிருந்து கிறிஸ்துவுக்கு நாம் எவ்வாறு நகர்கிறோம், தேவனுடைய முழு ஆலோசனையும் எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பற்றி சிந்திக்க இது உண்மையில் பயனுள்ள வழியாகும். பழைய ஏற்பாட்டு

> வரலாறு, மீட்பு வரலாறு பற்றி புதிய ஏற்பாடு பேசும் பல வழிகள் இந்த உடன்படிக்கை முறையைப் பின்பற்றுகின்றன.
>
> – Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

பழைய ஏற்பாட்டு வரலாற்றின் பல்வேறு சகாப்தப் பிரிவுகளின் செல்லுபடியாகும் தன்மையை இப்போது நாம் ஒப்புக்கொண்டுள்ளோம், பல வியாக்கியான அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட ஒரு பயனுள்ள சுருக்கத்தைக் கருத்தில் கொள்வோம்.

## உருவரை

பழைய ஏற்பாட்டு வரலாற்றைப் பிரிப்பதற்கான மிகவும் பிரபலமான வழிகளில் ஒன்று, ஒவ்வொரு சகாப்தத்தையும் தேவனுடைய உடன்படிக்கைகளில் ஒன்றுடன் தொடர்புபடுத்துவதாகும். தேவனுடைய மக்களுடனான உடன்படிக்கைகள் எப்போதுமே குறிப்பிடத்தக்க இறையியல் மாற்றங்களைக் கொண்டிருந்தன, எனவே சகாப்தப் பிரிவுகளுக்கு பயனுள்ள எல்லைகளை வழங்குகின்றன.

பல கிறிஸ்தவ மரபுகள் பழைய ஏற்பாட்டில் ஆறு முக்கிய தெய்வீக உடன்படிக்கைகளை அடையாளம் காட்டுகின்றன: அவையாவன; ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே மற்றும் தாவீதுடன் தொடர்புடைய உடன்படிக்கைகள், மற்றும் வாக்குத்தத்த தேசத்திலிருந்து இஸ்ரவேலின் நாடுகடத்தலின் முடிவில் வரும் என்று கணித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் முன்னறிவித்த புதிய உடன்படிக்கை ஆகியவையாகும்.

ஆதாமைப் பொறுத்தவரை, ஆதியாகமம் 1-3 இன் பதிவு பெரித் என்ற எபிரெய வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும், இது பொதுவாக ”உடன்படிக்கை” என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது. அப்படியிருந்தும், தேவன் ஆதாமுடன் உடன்படிக்கை செய்தார் என்று ஆதியாகமம் வலுவாகக் குறிப்பிடுகிறது. ஒரு எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 6:18-ல், நோவாவுடனான தனது உடன்படிக்கையை ”ஸ்தாபிப்பேன்” என்று தேவன் சொன்னார். ”நிறுவுதல்” என்று வியாக்கியானம் செய்யப்பட்ட எபிரெய வினைச்சொல் *கும்* ஆகும், இது முற்றிலும் புதிய ஒன்றின் தொடக்கத்தை விட, ஏற்கனவே இருந்த ஒன்றை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டது. எனவே, ஆதியாகம புத்தகம் ஆதாமுடனான தேவனுடைய உறவை உடன்படிக்கையாக முன்வைத்தது என்று நாம் உறுதியாக நம்பலாம். மேலும், ஒசியா 6:7-ல், தீர்க்கதரிசி தேவனுக்கும் ஆதாமுக்கும் இடையிலான உடன்படிக்கையை அல்லது தேவனிடத்தில் ஆதாம் பிரதிநிதித்துவப்படுத்தும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முழு மனித இனத்திற்கும் இடையிலான உடன்படிக்கையைக் குறிப்பிட்டிருக்கலாம்.

நோவாவுடனான தேவனுடைய உடன்படிக்கை ஆதியாகமம் 6:18-ல் ஜலப்பிரளயத்திற்கு முன்னும், 9:9-17 இல் ஜலப்பிரளயத்திற்கு பிறகும் வருகிறது. ஆதியாகமம் 15:18-ல் ஆபிரகாம் தன் மனைவியின் வேலைக்காரியான ஆகாரின் மூலம் ஒரு வாரிசைத் தேடுவதற்கு முன்பும், 17:2-ல் ஆகார் மூலம் ஒரு வாரிசைத் தேடிய பிறகும் ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. மோசேயின் கீழ் இஸ்ரவேலருடன் தேவன் செய்த உடன்படிக்கை யாத்திராகமம் 19-24 இல் சீனாய் மலையின் அடிவாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் தைரியமான லேவியரான பினகாசுடன் அவர் செய்த நெருக்கமான உடன்படிக்கை எண்ணாகமம் 25:13 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கை 2 சாமுவேல் 7 மற்றும் சங்கீதம் 89 மற்றும் 132 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக, எரேமியா 31:31-ல் ஒரு புதிய உடன்படிக்கையின் முன்னறிவிப்பைக் காண்கிறோம். இதே உடன்படிக்கை ஏசாயா 54:10 மற்றும் எசேக்கியேல் 34:25 இல் ”சமாதான உடன்படிக்கை” என்றும் அழைக்கப்படுகிறது. லூக்கா 22:20, எபிரெயர் 8:6-12 போன்ற வசனங்கள் இந்த உடன்படிக்கை கிறிஸ்துவுக்குள் வந்துவிட்டது என்று நமக்கு உறுதியளிக்கின்றன.

இந்த உடன்படிக்கைகள் வரலாற்றில் தேவன் வல்லமையாக செயல் புரிந்த காலங்களைக் குறிக்கின்றன, மேலும் அவை நீண்டகால இறையியல் முக்கியத்துவங்களை அறிமுகப்படுத்தின. தேவனுடனான ஆதாமின் உடன்படிக்கை உறவு சிருஷ்டிப்பு மற்றும் மனிதகுலம் பாவத்தில் விழுவதற்கான தேவனின் ஆரம்ப எதிர்வினை ஆகியவற்றின் பின்னணியில் நடந்தது. அது தேவனுக்கு மனிதகுலம் செய்யும் சேவையின் அடித்தளங்களை வலியுறுத்தியது, மேலும் பாவம் இந்த சேவையை எவ்வாறு சிக்கலாக்கியது என்பதை விவரித்தது. இந்த சேவையில் மனிதகுலம் இறுதியில் வெற்றிபெறும் என்ற தேவனின் வாக்குத்தத்தமும் அதில் இருந்தது.

நோவாவின் நாட்களில், மனிதகுலத்தின் பயங்கரமான பாவங்கள், தேவனானவர் ஒரு பெரிய நியாயத்தீர்ப்பின் ஜலப்பிரளயத்தை அனுப்புவதற்கு வழிவகுத்தது. நோவாவுடனான உடன்படிக்கையானது, பாவிகளான மக்கள் தங்கள் பாவத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் தேவனுக்கான அவர்களின் அசல் சேவையை நிறைவேற்றுவதற்கும் நேரத்தையும் வாய்ப்பையும் வழங்குவதற்காக, இயற்கையின் நீடித்த ஸ்திரத்தன்மையை நிறுவுவதற்கான தேவனுடைய வாக்குத்தத்தத்தை வலியுறுத்தியதில் ஆச்சரியமில்லை.

ஆபிரகாமின் காலத்தில், தேவனுக்கு சேவை செய்வதில் மனிதகுலத்தை வழிநடத்தும் மக்களாக தேவன் இஸ்ரவேலைத் தேர்ந்தெடுத்தார். எனவே, ஆபிரகாமுடனான உடன்படிக்கை இஸ்ரவேலைத் தேர்ந்தெடுப்பதை நோக்கியதாக இருந்தது. இந்த உடன்படிக்கை சகாப்தம், தேவனுடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாக்குத்தத்தங்களில் விசுவாசம் வைக்கவும், அவருக்கு உண்மையாக இருக்கவும் இஸ்ரவேலின் அவசியத்தை வலியுறுத்தியது.

இஸ்ரவேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களை வாக்குத்தத்த தேசத்துக்குப் போகச் செய்தபின் தேவன் மோசேயின் மூலம் உடன்படிக்கை செய்துகொண்டார். இந்த உடன்படிக்கை மோசேயின் நெறிப்படுத்தப்பட்ட தேசிய சட்டத்தை நோக்கியதாக இருந்தது என்பதில் ஆச்சரியமில்லை, இது இஸ்ரவேலர்கள் தேவனுக்கு சேவை செய்வதில் முன்னேறும்போது அவர்களுக்கு வழிகாட்டியது.

தாவீதின் நாட்களில் தேவன் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக எழுப்பினார். தாவீதுடன் அவர் செய்த உடன்படிக்கை, தாவீதின் குடும்பத்தை இஸ்ரவேலின் ஏகாதிபத்திய விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும் நிரந்தர அரச வம்சமாக நிறுவியது. இந்த விரிவாக்கம் தேவனுக்கு இஸ்ரவேலர் செய்த சேவையின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.

இறுதியாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலினுடைய சிறையிருப்பின் முடிவில் ஒரு புதிய உடன்படிக்கை வரும் என்று கணித்தனர், அப்போது தேவன் எல்லா வரலாற்றையும் நிறைவேற்றுவார். மேசியா தேவனுடைய மக்களை மீட்டு, தேவனுடைய ராஜ்யத்தை உலகம் முழுவதும் பரப்புவார்.

தேவனுடைய உடன்படிக்கைகள் ஒவ்வொன்றும் மனிதர்களுடன் தொடர்புகொள்வதற்கான வெவ்வேறு வழிகளை நிறுவின, மேலும் ஒவ்வொன்றும் அவருடைய விசுவாசமுள்ள மக்களுக்கு அவரது சேவையில் பின்பற்ற புதிய நியமங்களை வழங்கின.

இதுவரை சகாப்தப் பிரிவுகள் பற்றிய நமது விவாதத்தில், வேதாகம வரலாறு பிரிக்கப்பட்ட பல்வேறு வழிகளைக் கண்டோம், மேலும் சகாப்தங்களின் பயனுள்ள உருவரையை வழங்கியுள்ளோம். இந்த கட்டத்தில், வேதாகமத்தின் நவீன பயன்பாட்டில் இந்த உருவரை ஏற்படுத்தும் சில தாக்கங்களைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## தாக்கங்கள்

பழைய ஏற்பாட்டை யுகங்களாகப் பிரிப்பதன் மூலம், தேவன் தனது மக்கள் வெவ்வேறு காலங்களில் இறையியல் கருப்பொருள்களை வெவ்வேறு வழிகளில் புரிந்துகொண்டு பயன்படுத்த விரும்பினார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் வரலாற்றின் முந்தைய காலகட்டங்களில் வாழ்ந்ததைப் போல தேவனுக்கு சேவை செய்யக்கூடாது என்பதைப் போலவே, புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் வரலாற்றின் முந்தைய காலங்களில் வாழ்வது போல வேதவாக்கியங்களை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சாலொமோன் எருசலேமில் தேவனுடைய ஆலயத்தைக் கட்டிய சில காலத்திற்குப் பிறகு வாழும் ஒரு இஸ்ரவேலர் நீங்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் தாவீதின் உடன்படிக்கை யுகத்தில் வாழ்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். மோசேயின் சகாப்தத்தில், மோசேயின் ஆசரிப்பு கூடாரத்தில் இஸ்ரவேலர் பலியிட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் சகாப்தத்தில், ஆலயத்தில் மட்டுமே பலிகளைச் செலுத்துமாறு தேவன் உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உங்கள் வரலாற்றுப் பின்னணியில், மோசேயின் கூடாரத்தில் பலியிடுவது தேவனுடைய சித்தத்தை மீறுவதாகும். நீங்கள் மோசேயின் உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்து, ஆபிரகாமும் மற்ற மூதாதையர்களும் செய்ததைப் போல, பல்வேறு இடங்களில் பலிபீடங்களைக் கட்டுவதற்கும் பலியிடுவதற்கும் திரும்பினால் இது உண்மையாக இருக்கும். ஆராதனையில் பலியிடுவதற்கு தேவன் ஒரு புதிய வழியைக் கட்டளையிட்டவுடன், தனது மக்கள் ஒருபோதும் பழைய வழிகளுக்குத் திரும்ப மாட்டார்கள் என்று அவர் எதிர்பார்த்தார்.

அதேபோல், ஆராதனையில் பலி என்ற பழைய ஏற்பாட்டின் கருப்பொருளின் நவீன பயன்பாட்டைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, நாம் புதிய உடன்படிக்கையின் சகாப்தத்தில் வாழ்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். புதிய ஏற்பாடு மீண்டும் மீண்டும் விளக்குவது போல, கிறிஸ்துவின் நித்தியமான, பரிபூரணமான பலியானது முந்தைய அனைத்து தியாக வடிவங்களையும் முறியடித்துள்ளது. சிலுவையில் நிகழ்ந்த அவருடைய மரணமானது தேவனுடைய உண்மையுள்ள மக்கள் தேவனுடைய ஆராதனையில் பலியிட வேண்டிய விதத்தை மாற்றியது. அதனால்தான் எபிரெய நிருபத்தின் புதிய ஏற்பாட்டு ஆசிரியர் பழைய ஏற்பாட்டு பலிகளுக்குத் திரும்ப விரும்பும் கிறிஸ்தவர்களை மிகவும் வன்மையாகக் கண்டித்தார். முதலாவதாக, எரேமியா 31-ல் எரேமியா முன்னறிவித்த புதிய உடன்படிக்கையை கிறிஸ்து தொடங்கி வைத்தார் என்று அவர் வாதிட்டார். புதிய உடன்படிக்கையானது பழைய பலி முறையை வழக்கொழிந்து போகச் செய்கிறது என்று அவர் கூறினார். எபிரெயர் 8:13 இல் அவர் எழுதியிருப்பதை கவனிக்கவும்:

> புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது (எபி 8:13).

"பழையது" அல்லது "காலாவதியானது" என்று மொழிபெயர்க்கப்படுகிற கிரேக்க வார்த்தையான பாலியோவைப் பயன்படுத்தி, இங்கே, புதிய

உடன்படிக்கையின் வருகையானது பழைய வழிகளை ”வழக்கொழிந்ததாக” ஆக்கியது என்று எபிரெய ஆசிரியர் கூறினார்.

இப்போது, நாம் கவனமாக இருக்க வேண்டும், ஏனென்றால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் பழைய ஏற்பாட்டை வெறுமனே நிராகரிக்க வேண்டும், அதன் போதனையில் கவனம் செலுத்தக்கூடாது என்று பல நல்ல எண்ணம் கொண்ட கிறிஸ்தவர்கள் கருதுகிறார்கள். ஆனால் உண்மைக்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது. எபிரெயர் புத்தகமே கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்துகிறது. பழைய ஏற்பாடு பொருத்தமற்றது என்று அதன் ஆசிரியர் கிறிஸ்தவர்களிடம் சொல்லவில்லை. மாறாக, நாம் வேறு ஒரு சகாப்தத்தில் வாழ்கிறோம் என்றும், புதிய உடன்படிக்கை பலியின் நடைமுறையை மாற்றியமைக்க நம்மைக் கோருகிறது என்றும் அவர் கூறிக்கொண்டிருந்தார். நாம் பழைய வழிகளைப் புறக்கணிக்கவில்லை, ஆனால் நாம் இன்னும் பழைய நாட்களில் வாழ்ந்ததைப் போல தேவனுக்கு ஊழியம் செய்ய ஒருபோதும் முயற்சிக்கக்கூடாது.

மற்றொரு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டானது போரில் தலைமைத்துவத்தின் கருப்பொருள் ஆகும். தாவீதின் வம்ச உடன்படிக்கையின் காலத்தில் நீங்கள் வாழ்கிறீர்கள் என்று கற்பனை செய்து பார்க்கவும். தேவன் இஸ்ரவேலின் ராஜாக்களை தீமைக்கு எதிரான போருக்குத் தன் ஜனங்களை வழிநடத்தும்படி கட்டளையிட்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். ராஜாக்கள் தேவனிடமிருந்து வழிநடத்தலைப் பெற்று, நீங்கள் போரில் பங்கேற்கும் வழிகளை வழிநடத்துகிறார்கள். ஆனால் இப்போது நீங்கள் தனிப்பட்ட முறையில் தாவீது ராஜாவை விரும்பவில்லை என்றும், மோசேயின் தேசிய சட்டத்தின் உடன்படிக்கை சகாப்தத்திற்குத் திரும்ப விரும்புகிறீர்கள் என்றும் கற்பனை செய்து பார்க்கவும். உங்கள் மூதாதையரைப் போலவே, கிதியோன் போன்ற உள்ளூர் நியாயாதிபதியையோ அல்லது யோசுவாவைப் போன்ற எப்பிராயிமீயரையோ அல்லது மோசேயைப் போன்ற லேவியரையோ பின்பற்ற நீங்கள் விரும்பலாம். ஆனால் தாவீதின் வம்சத்திற்குப் பதிலாக இவற்றில் ஒன்றை நீங்கள் பின்பற்றினால், அது பாவமாக இருக்கும். உங்கள் சகாப்தத்திற்கான தேவ கட்டளையை நீங்கள் மீறுவீர்கள். நீங்கள் மோசேயின் காலத்தில் வாழ்ந்து ஆபிரகாமின் உடன்படிக்கை யுகத்தில் தேவனுடைய மக்கள் செய்ததைப் போல ஒரு கோத்திரப் பிதாவைப் பின்பற்ற விரும்பினால் நீங்கள் இதேபோன்ற தவறைச் செய்வீர்கள். ஒவ்வொரு யுகத்திலும், அந்த யுகத்திற்காக தேவன் நிறுவிய இராணுவத் தலைமையை நாம் பின்பற்ற வேண்டும்.

அதில் நவீன கிறிஸ்தவர்களும் அடங்குவர். புதிய உடன்படிக்கையின் கீழ் வாழும் மக்களாகிய நாம் தாவீதின் பெரிய குமாரனாகிய இயேசுவைப் பின்பற்றுகிறோம். அவர் தேவனால் நியமிக்கப்பட்ட ராஜா. தீய சக்திகளுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிராக தனது மக்களை போருக்கு வழிநடத்துவதற்கான பிரத்தியேக உரிமையை தேவன் அவருக்கு வழங்கியுள்ளார். ஆனால் அதை எப்படிச் செய்வது? இப்போதைய போருக்கான நம்முடைய உத்தி என்ன? புதிய உடன்படிக்கையின் யுத்தத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியர் 6:12-ல் விளக்கிய விதத்தைக் கவனியுங்கள்:

> ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:12).

மோசே, தாவீது போன்ற தலைவர்கள் தேவனுடைய மக்களை சரீர, மாம்ச, இரத்தப் போர்களில் வழிநடத்திய முந்தைய சகாப்தங்களிலிருந்து இது மிகவும் மாறுபட்ட உத்தியாகும். இன்னும் ஆவிக்குரிய போர்கள் நடந்தன, ஆனால் இந்த தலைவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய சேனைகளுக்கு தலைமை தாங்கவில்லை. இதற்கு நேர்மாறாக, இயேசு சபையை சரீர ரீதியான யுத்தங்களுக்கு வழிநடத்தவில்லை. ஆனால் அவர் நம்மை ஆவிக்குரிய யுத்தத்தில் வழிநடத்துகிறார், இந்த உத்தி மாற்றத்தை நாம் புறக்கணித்தால் தேவனுடைய சித்தத்தை மீறுகிறோம்.

> புதிய ஏற்பாடு முக்கியமாக பழைய ஏற்பாட்டின் போர்கள் மற்றும் யுத்தங்களை தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான போரின் ஒரு பகுதியாகவும், தேவனுடைய மக்களுக்கும் தேவனுடைய திட்டத்தை அழிக்க முயற்சிக்கும் சாத்தானுக்கும் இடையிலான போரின் ஒரு பகுதியாகவும் பார்க்கிறது. எனவே, இப்போது யுத்தத்தின் அதே பகுதியாக இருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இது பொருந்தும், உங்கள் போராட்டம் சாத்தானின் தீய சக்திகளுக்கு எதிரானது என்றும், கிறிஸ்தவர்கள் இந்த போரில் உறுதியாக நிற்க தேவனுடைய முழு கவசத்தை அணிய வேண்டும் என்றும் எபேசியர் 6 கூறுகிறது.
>
> – Dr. P. J. பைஸ்

> புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டுச் சித்தரிப்புகளை ஆவிக்குரிய மற்றும் தேசியப் போரின் சித்தரிப்புகளை எடுத்துக்கொண்டு, அதை சில வழிகளில் தீவிரப்படுத்தி, இன்று மக்கள் பிரபலமாக புரிந்துகொள்வதை விட மிகவும் வேறுபட்ட பாதையில் பயன்படுத்துகிறார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> முதலாவதாக, கிறிஸ்து ஆவிக்குரிய போரை எதிர்த்துப் போராட வந்தார். அவர் இருளை வெல்ல வந்தார் என்று யோவான் 1 நமக்குச் சொல்கிறது. இருள் அவரைப் புரிந்து கொள்ளவில்லை என்பது பிரச்சனை அல்ல, அவரை வெல்ல முயற்சிப்பது தான் பிரச்சனையாகும், மேலும் அவர் இருளுக்கு எதிராகப் போராடுகிறதை குறிப்பாக யோவானின் சுவிசேஷத்தில் காண்கிறோம். எனவே, கிறிஸ்து இந்த உலகத்தின் ஆட்சியாளருக்கு எதிராக, அதாவது சாத்தானுக்கு எதிராக போராடும் தெய்வீக வீரராக வருகிறார். யோவான் 12-ல் இயேசு தம்முடைய மகிமையின் நேரம் வந்துவிட்டது, அதாவது அவர் சிலுவையில் அறையப்படுகிற நேரம் வந்துவிட்டது என்று கூறுகிறார், அந்த நேரத்தில் இந்த உலகத்தின் அதிபதி தூக்கி எறியப்படுவான் என்று கூறுகிறார்... ஆகவே, நம்முடைய போரின் ஆயுதங்கள் தேவனுடைய வார்த்தை, ஜெபம், விசுவாசம் முதலியவை என்று பவுல் சொல்லும்போது, எபேசியர் 6-ல் அவர் கூறுவது போல, இது இனி புவிசார் அரசியலோ, தேசிய யுத்தமோ அல்ல, கிறிஸ்தவர்கள் இந்தப் போரை தேசியவாதப் போராக பார்க்கக்கூடாது... நம்மிடம் வாளும் சிலுவையும் இருக்கிறது, மனிதர்களாகிய நம் போக்கு சிலுவையைக் கீழே போட்டு வாளை எடுப்பதுதான். ஆனால் இயேசு தம் சிலுவையை எடுத்து என்னைப் பின்பற்றாவிட்டால் எவரும் என் சீஷராக இருக்க முடியாது என்றார். ஆகவே, இன்று நாம் ஆவிக்குரிய போரை எதிர்த்துப் போராடும் விதமானது, இயேசு சிலுவையிலிருந்தும் அவருடைய முழு பூவுலக வாழ்க்கையிலும் ஊழியத்திலும் காட்டிய சுய தியாக, சுய-கொடுக்கும் அன்பின் மூலமாக இருக்க வேண்டும்.
>
> – Rev. மைக் குளோடோ

தம்முடைய ஜனங்கள் வாழ்ந்த உடன்படிக்கை யுகத்துக்குப் பொருத்தமான வழிகளில் தனக்குச் சேவை செய்ய வேண்டுமென்று தேவன் எப்பொழுதும் எதிர்பார்த்திருக்கிறார். எனவே, பழைய ஏற்பாட்டு வரலாறு எவ்வாறு முக்கிய உடன்படிக்கை சகாப்தங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்வது நம் காலத்தில் வேதாகமத்தைப் பயன்படுத்துவதற்கு இன்றியமையாததாகும். தேவன் வரலாற்றை முன்னோக்கி நகர்த்தாதது போல கடிகாரத்தை பின்னோக்கி திருப்புவதற்கு பதிலாக, கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கை வரை ஒவ்வொரு உடன்படிக்கை

யுகத்திலும் வளரும் ஒவ்வொரு இறையியல் கருப்பொருளையும் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

இப்போது நாம் பழைய ஏற்பாட்டின் சகாப்தப் பிரிவுகளின் அடிப்படையில் நவீன பயன்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டு சகாப்தங்களை கருத்தில் கொண்டுள்ளோம், சகாப்த வளர்ச்சிகள் நவீன பயன்பாட்டை எவ்வாறு தெரிவிக்க வேண்டும் என்பதை ஆராய்வோம்.

# சகாப்த முன்னேற்றங்கள்

சகாப்த வளர்ச்சியின் கருத்தை விளக்க, வளர்ந்து வரும் ஒரு மரத்தைப் பற்றி மீண்டும் சிந்திப்போம். இந்த முறை, உங்களிடம் ஒரு விதையின் புகைப்படமும், அந்த விதையிலிருந்து வளர்ந்த ஒரு மரத்தின் புகைப்படமும் இருப்பதாக கற்பனை செய்து பாருங்கள். விதையும் மரமும் மிகவும் வித்தியாசமாகத் தோன்றுகின்றன, அவை வெவ்வேறு நேரங்களில் ஒன்றாக இருக்கின்றன என்று நம்புவது கடினம். ஆனால் அவை அப்படி ஒன்றாக இருக்கின்றன. அவை வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் இருக்கிற ஒரே உயிரினமாகும். அதை நிரூபிக்க அவைகளின் டி.என்.ஏவில் அதே மரபணு கட்டமைப்புகள் உள்ளன.

அதுபோலவே, முந்தைய மற்றும் பிந்தைய பழைய ஏற்பாட்டு சகாப்தங்களுக்கு இடையே எண்ணற்ற இறையியல் வேறுபாடுகள் உள்ளன. ஆனால் அவற்றின் அடிப்படை இறையியல் கட்டமைப்புகள், அவற்றின் டி.என்.ஏ ஆகியவற்றைப் பற்றி நாம் அறிந்தால், இந்த இறையியல் மாற்றங்கள் உண்மையில் வளர்ந்து வரும் ஒரு நம்பிக்கையின் கரிம வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன என்பதைக் காண்கிறோம்.

பழைய ஏற்பாட்டு சகாப்த நிகழ்வுகளை நான்கு பகுதிகளாக ஆராய்வோம். முதலாவதாக, இந்த வளர்ச்சிகளுக்குப் பின்னால் உள்ள இரண்டு முக்கிய கதாபாத்திரங்கள் வேதாகம வரலாறு முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதைக் காண்போம். இரண்டாவதாக, ஒவ்வொரு சகாப்தமும் ஒரு ஒருங்கிணைந்த கதைக்களத்தில் மற்றவைகளுடன் இணைக்கப்பட்டிருப்பதைக் காண்போம். மூன்றாவதாக, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களே பெரும்பாலும் முந்தைய சகாப்தங்களை பிற்கால வாசகர்களுக்குப் பயன்படுத்தினார்கள் என்பதைக் காண்போம். நான்காவதாக, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் இந்த பயன்பாடுகளைச் செய்ய நம்பிய சகாப்தங்களுக்கு இடையிலான சில தொடர்புகளை நாம்

முன்னிலைப்படுத்துவோம். வேதாகம வரலாற்றின் முக்கிய பாத்திரங்களிலிருந்து தொடங்குவோம்.

## பாத்திரங்கள்

வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்ட வரலாறு முழுவதிலும், அதே பாத்திரங்கள் நன்மையின் சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கும் இடையிலான பெரும் மோதலில் ஈடுபட்டுள்ளன.

இலக்கிய அடிப்படையில், நல்லவைகள் கதையின் கதாநாயகனால் வழிநடத்தப்படுகின்றன. தேவன் தான் இங்கே நாயகன் ஆவார். தீய சக்திகள் எதிரியான மிகவும் பொல்லாத சாத்தானால் வழிநடத்தப்படுகின்றன, அவன் தேவன் தனது இலக்கை அடைவதைத் தடுக்க முயற்சிக்கிறான். சாத்தான் மிகவும் சக்திவாய்ந்தவனும், புத்திசாலியுமாவான். ஆனால் அவன் ஒரு சிருஷ்டியாக இருக்கிறான், எப்போதும் சிருஷ்டிகரின் சர்வாதிகார கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறான். அப்படியிருந்தும், தெய்வீக நாடகம் நடக்கும்போது சாத்தான் தனக்கு எதிராக நிற்க தேவன் அனுமதித்துள்ளார்.

தேவன் தனது பரலோக சிங்காசனத்திலிருந்து ஆட்சி செய்து, தனது அற்புதமான மகிமையால் தனது தேவலோக அரண்மனையை நிரப்பும் உன்னதமான சிருஷ்டிப்பின் ராஜா ஆவார். பரலோகத்தில் அவருக்கு சேவை செய்யும் உயிரினங்கள் ஏற்கனவே அவரை கனம் செய்கின்றன. ஆனால் தேவன் தம்முடைய மகிமையை பூமியெங்கும் விரிவுபடுத்துவதன் மூலம் தம்முடைய மகிமையை அதிகப்படுத்துவதில் எப்பொழுதும் உறுதியாக இருக்கிறார். இந்த இலக்கை அடைய, தேவன் தனது ராஜ்யத்தை பூமிக்கு விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளார், இதனால் பூமி வானத்தைப் போல மாறும். அது நிகழும்போது, பூமிக்கு மேலேயும் கீழேயும் உள்ள ஒவ்வொரு உயிரினமும் அவருக்கு அளவற்ற ஆராதனையையும் புகழையும் கொடுக்கும். இந்த இலக்கை நோக்கி வேலை செய்யும் எண்ணற்ற ஆவிகளை தேவன் பயன்படுத்துகிறார். ஆனால், பூமியை நிரப்பி அடக்கி ஆள தன் பூலோக சாயலான மனிதனுக்கு அந்த தகுதியை கொடுத்திருக்கிறார். வேதம் முழுவதிலும், நாம் தேவனுடைய பிரதிநிதிகளாக இருக்கிறோம், அவருடைய மகிமையின் இறுதிக் காட்சிக்காக உலகத்தை ஆயத்தப்படுத்துகிறோம்.

மோதலின் மறுபக்கத்தில், மனிதகுலம் தேவனுக்காக பூமியை நிரப்புவதையும் அடக்குவதையும் தடுக்க முயற்சிப்பதன் மூலம் சாத்தான் தேவனுடைய மகிமை பரவுவதை எதிர்க்கிறான். பூமியெங்கும் தேவனுடைய ராஜ்யம் பரவுவதைத் தடுப்பதற்காக, சாத்தான் பல ஆவிகளையும் மனிதர்களையும் தேவனுக்கு எதிராக கலகம் செய்வதற்கும், தேவனுடைய ஆவிக்குரிய மற்றும் மனித ஊழியர்களுடன் மோதுவதற்கும் வழிநடத்துகிறான். பொய்கள், ஏமாற்றுதல், பொய் மதம் மற்றும் வீழ்ந்த

மனிதகுலத்தின் பாவ ஆசைகளுக்கு வேண்டுகோள் விடுப்பது உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அவன் தனது நோக்கத்தை நிறைவேற்ற மனித கூட்டாளிகளைப் பெறுகிறான்.

> ஒவ்வொரு பெரிய கதையிலும் ஒரு கதாநாயகன் இருக்கிறார், அந்த கதாநாயகனுக்கு எதிராக நிற்பவர் ஒருவர் இருக்கிறார். கதையின் முக்கிய கதாபாத்திரமான கதாநாயகனும், அந்த கதாபாத்திரத்திற்கு எதிராக நிற்கும் வில்லனும் இருக்கிறார்கள். எல்லாக் கதைகளிலும் வேதமே மிகப் பெரியது, எனவே பழைய ஏற்பாட்டைப் படிக்கும்போது, தேவனுக்கும் அவருடைய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவுக்கும் அந்த மேசியா எப்போதும் வருவதைத் தடுக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய முயற்சிக்கும் பிசாசுக்கும் இடையே ஒரு யுத்தம் இணைந்திருப்பதைக் காண்பதில் ஆச்சரியமில்லை. எனவே, ஏற்கனவே ஏதேன் தோட்டத்தில் பிசாசை நசுக்க ஸ்திரீக்கு ஒரு வித்து பிறக்கும் என்று தேவன் வாக்குக் கொடுத்தபோது, அந்த புள்ளியில் இருந்து ஒவ்வொரு திருப்பத்திலும் பிசாசு தேவனை எதிர்ப்பதை நீங்கள் காண்கிறீர்கள். ஒரு சிறு குழந்தையாக அந்த வித்து இருக்கும்போது கூட, பல முறை பிசாசானவன் அந்த இளம் குழந்தையின் உயிரைப் பறிக்க முயற்சிக்கிறான், அல்லது தேவனுடைய மக்கள் செழிப்பாக இருக்கும்போது, அவர்களை சிறைக்குள் கொண்டு வந்து நசுக்க முயற்சிக்கிறான். அந்தக் கதையானது பழைய ஏற்பாடு முழுவதும் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவதைக் காண்கிறீர்கள்.
>
> – Dr. பிலிப் ரைகென்

> பழைய ஏற்பாட்டு வரலாற்றின் கதைக்களத்தில், ஆரம்பத்திலிருந்தே, தேவன் கதாநாயகனாகவும், சாத்தான் எதிரியாகவும் உள்ளனர். தோட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே நீங்கள் அதைக் காண்கிறீர்கள், ஏனென்றால் சாத்தான் வந்து ஆதாமையும் ஏவாளையும் சோதிக்கிறான், ஆனால் அவன் அவர்களை தேவனுக்கு எதிராக சோதிக்கிறான்… வீழ்ச்சிக்குப் பிறகு, பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளிலும், நிச்சயமாக புதிய ஏற்பாட்டிலும், சர்ப்பத்தின் வித்துக்கும் ஏவாளின் வித்துக்கும் இடையில் நடக்கவிருக்கும் இந்த தொடர்ச்சியான போராட்டத்தைப் பற்றிய இந்த குறிப்பு நமக்குக் கிடைக்கிறது.

> நிச்சயமாக இது இறுதியாக அதன் உச்சக்கட்டத்தை அடைகிறது, பிசாசை அவமானப்படுத்தி அவனை என்றென்றும் தோற்கடிக்கும் கிறிஸ்துவில் அதன் நிறைவு வருகிறது... பழைய ஏற்பாட்டில் அது காலப்போக்கில் சர்ப்பத்தின் வித்தாக விளையாடுவதை நீங்கள் காண்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன், அதை நாம் தேவனுடைய எதிரிகள் என்று பொதுமைப்படுத்தலாம், அது தொடர்ந்து தேவனை எதிர்க்கிறதாகவும், அவரது மக்களை எதிர்க்கிறதாகவும், அவரது மக்களுக்கு எதிராக போருக்குச் செல்கிறதாயும், அவரது மக்களை ஒடுக்குவதாகவும் இருப்பதை முழுவதுமாகக் காண முடியும். இஸ்ரவேலர் பெலிஸ்தியர்களுடன் சண்டையிட்டது உங்களுக்கு தெரியும், ஆனால் அவர்கள் பெலிஸ்தியர்களுக்கும் மேலானவனான பிசாசிடம் சண்டையிட்டார்கள் என்பதே உண்மையாகும். அதன் பின்னணியில், தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே நடந்துகொண்டிருக்கும் யுத்தம் தான் அது என்று நான் நினைக்கிறேன்.
>
> – Dr. பிரையன் ஜே. விக்கர்ஸ்

தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை நவீன கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தவறவிடுகிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அனுபவ உலகம் தேவனாலும், அவரைச் சேவிக்கும் ஆவிகளாலும், சாத்தானாலும் அவரைச் சேவிக்கும் ஆவிகளாலும் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய மிகக் குறைந்த விழிப்புணர்வோடு நம்மில் பலர் வேதத்தை கையாளுகிறோம். ஆனால் வேதாகமத்தின் அசல் வாசகர்களுக்கு இந்த பிரச்சனை இருக்கவில்லை. ஆவிக்குரிய மற்றும் அனுபவ யதார்த்தங்களுக்கு இடையிலான மாறும் தொடர்புகளை அவர்கள் ஏற்கனவே புரிந்து கொண்டனர். உண்மையில், இந்த நம்பிக்கை பண்டைய உலகில் மிகவும் பொதுவானதாக இருந்தது, வேதாகமத்தின் ஆசிரியர்கள் அதைப் பற்றிய முழுமையான விளக்கத்தை வழங்க வேண்டிய அவசியத்தை ஒருபோதும் உணரவில்லை. எனவே, நவீன மக்களாகிய நாம், இந்த ஆவிக்குரிய மோதலின் அடிப்படையில் வேதாகமத்தின் நாடகத்தைப் பார்க்கத் தொடங்கினால், வேதத்தின் அசல் வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருந்த இந்த மோதல் வேதம் சொல்லும் அனைத்திற்கும் அடித்தளமாக உள்ளது என்பதை நாம் கண்டுபிடிப்போம்.

வேதாகமத்தின் முக்கிய கதாபாத்திரங்களை மனதில் கொண்டு, பழைய ஏற்பாட்டு சகாப்த வளர்ச்சிகளின் இரண்டாவது அம்சமான வேதத்தின் அடிப்படை கதைக்களத்திற்கு வருவோம்.

## கதைக்களம்

உடன்படிக்கை சகாப்தங்களுக்கிடையில் எண்ணற்ற வேறுபாடுகள் இருந்தபோதிலும், இந்த வேறுபாடுகள் அனைத்தும் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான மோதலைப் பற்றிய ஒரு ஒருங்கிணைந்த, அனைத்தையும் உள்ளடக்கிய விவரிப்புக்குள் பொருந்துகின்றன. வசதிக்காக, அளவற்ற புகழைப் பெறுவதற்காக தேவன் தனது மகிமையைப் பரப்புகிற வேதத்தின் கதையில் முக்கிய அத்தியாயங்களாக வேதாகமத்தின் உடன்படிக்கை சகாப்தங்களை கருதுவோம்.

ஆதாமின் சகாப்தமான முதல் அத்தியாயத்தில் நாடகம் தொடங்குகிறது. இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில், தேவன் முதல் மனிதர்களை பூமியில் அவரது கண்ணுக்குத் தெரியும் மகிமை முதலில் தோன்றிய ஒரே இடமாகவும் புனித அரண்மனையாகவும் செயல்பட்ட ஏதேன் தோட்டத்தில் வைத்தார். சிருஷ்டிப்பிற்கான அவரது நோக்கத்திற்கு ஏற்ப, தேவன் ஆதாம் மற்றும் ஏவாளை பூமியை நிரப்புவதன் மூலமும் அதை ஆள செய்வதன் மூலமும் தனது பரிசுத்த தோட்டத்தின் எல்லைகளை விரிவுபடுத்துமாறு பணித்தார். தேவன் தம்முடைய மகிமையான பிரசன்னத்தை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமான இடமாக பூமியை மாற்றுவதே இதன் நோக்கமாக இருந்தது.

நிச்சயமாக, சாத்தான் முதல் மனிதர்களை தேவனுக்கு எதிராக கலகத்திற்கு இட்டுச் சென்றதன் மூலம் இந்த திட்டத்தை எதிர்த்தான். அதற்கு பதிலளிக்கும் விதமாக, தேவன் தனது சிருஷ்டிப்பை சபித்தார், மேலும் மனிதகுலம் செய்ய வேண்டிய வேலையை கடினமாக்கினார். இந்த புள்ளியிலிருந்து மனிதகுலம் எதிரெதிர் பிரிவுகளாகப் பிரியும் என்றும் அவர் அறிவித்தார். அதாவது, ஸ்திரீயின் வித்து தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றும் மக்களைக் கொண்டிருக்கும், மேலும் சர்ப்பத்தின் வித்தானது சாத்தானுடன் கலகத்தில் இணைந்த மக்களைக் கொண்டிருக்கும். அதேசமயம், அந்த ஸ்திரீயின் சந்ததி இறுதியில் சாத்தானுக்கும் அவனுடைய சந்ததிக்கும் எதிராக வெற்றி பெறும் என்று தேவன் வாக்குக் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டின் எஞ்சிய உடன்படிக்கை சகாப்தங்கள் வேதாகமக் கதைக்களத்தை உருவாக்குகின்றன.

நோவாவின் உடன்படிக்கையின் சகாப்தமான இரண்டாவது அதிகாரத்தில், சாத்தானைப் பின்தொடர்ந்தபோது மனிதகுலம் செய்த பயங்கரமான வன்முறையிலிருந்து தேவன் பூமியை சுத்தப்படுத்தினார். ஸ்திரீயினுடைய வித்தையும் நோவா மற்றும் அவருடைய குடும்பத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர் காப்பாற்றி, மேலும் ஒரு நிலையான உலகத்தை நிறுவினார், அதில் பூமியை நிரப்பி ஆளும்போது தீமையை எதிர்க்குமாறு மனிதர்களுக்கு கூறப்பட்டது.

ஆபிரகாமின் உடன்படிக்கை சகாப்தமான மூன்றாம் அதிகாரத்தில், சாத்தானுடனும் அவனைப் பின்பற்றுபவர்களுடனும் மனிதகுலத்தை மோதலுக்கு இட்டுச்செல்லும் ஸ்திரீயினுடைய சந்ததியின் ஒரு பகுதியாக ஆபிரகாமின் குடும்பத்தை தேவன் தேர்ந்தெடுத்தார். தேவன் ஆபிரகாமின் சந்ததியினரைப் பெருக்கி, அவர்களுக்குக் கானான் தேசத்தைக் கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். அந்த புவியியல் தொடக்கப் புள்ளியிலிருந்து, அவர்கள் இறுதியில் தேவனுக்கும் அவரது திட்டத்திற்கும் எதிரான அனைத்து எதிர்ப்புகளையும் சமாளிப்பார்கள். அவர்கள் பூமி முழுவதையும் சுதந்தரித்து, மனித இனத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பரப்புவார்கள்.

மோசேயின் உடன்படிக்கையின் காலமான நான்காம் அதிகாரத்தில், தேவன் இஸ்ரவேலுக்கு எகிப்தியர்கள் மற்றும் அவர்களின் சாத்தானிய தேவர்களுக்கு எதிரான ஒரு பெரிய வெற்றியைக் கொடுத்தார். அவர் இஸ்ரவேலை ஒரு தேசமாக உருவாக்கி, தனது சட்டத்தால் ஆளப்பட்டு, கானானியரை வெளியேற்றும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். இஸ்ரவேலர்கள் கானானுக்குச் சென்றபோது, தேவன் கானானியருக்கும் அவர்கள் சேவை செய்த சாத்தானின் ஆவிகளுக்கும் எதிராக அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்தார். அவர் இஸ்ரவேலர்களை தேசத்தில் ஸ்தாபித்து, வளப்படுத்தி, தேவனுடைய ராஜ்யத்தை பூமியெங்கும் பரப்பும் அவர்களின் இறுதி இலக்கை நோக்கி அவர்களை நகர்த்தினார்.

தாவீதின் உடன்படிக்கை சகாப்தமான ஐந்தாம் அதிகாரத்தில், தாவீதின் குடும்பம் தேவனுடைய மக்களை ஆளவும், சாத்தானுக்குச் சேவை செய்யும் தேசங்களுடன் மேலும் மோதலுக்கு அவர்களை வழிநடத்தவும் நியமிக்கப்பட்டது. தாவீதின் வம்சம் கானானில் பாதுகாப்பைக் கொண்டுவந்தது மற்றும் உலகத்திற்கான தேவனுடைய திட்டத்திற்கு சேவை செய்வதற்காக இஸ்ரவேலின் எல்லைகளை தொடர்ந்து விரிவுபடுத்தியது. துரதிர்ஷ்டவசமாக, தேவன் தங்கள் சாம்ராஜ்யத்தை அழித்து அவர்களை நாடுகடத்தும் அளவுக்கு காலப்போக்கில் இஸ்ரவேலின் ராஜாக்கள் தேவனுக்கு எதிராக வெளிப்படையாக கலகம் செய்தனர். நாடுகடத்தப்பட்ட காலத்தில், அந்நிய சாம்ராஜ்ஜியங்கள் மற்றும் அவர்களின் தேவர்களின் கொடுங்கோன்மையின் கீழ் அவர்கள் பாதிக்கப்பட்டனர். இறுதியில், தேவன் நாடுகடத்தலை முடிவுக்குக் கொண்டுவர முன்வந்தார், மேலும் அவர்கள் கானானில் ராஜ்யத்தை மீட்டெடுக்க முயற்சிக்கும்படி ஒரு சிறிய கூட்ட மக்களை வாக்குத்தத்த தேசத்திற்குத் திருப்பி அனுப்பினார். ஆனால் அந்த எஞ்சியவர்கள் கூட விசுவாசமாக இருக்கத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தவறிவிட்டனர், எனவே நாடுகடத்தல் பொல்லாங்கின் கொடுங்கோன்மையின் கீழ் தொடர்ந்தது.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடைசி அத்தியாயமானது, இஸ்ரவேலின் ஒரு பகுதியினர் மனந்திரும்பி, தாவீதின் பெரிய குமாரனாகிய மேசியா அல்லது கிறிஸ்து அவர்களின் பாவங்களுக்காக பாவநிவர்த்தி செய்யும் போது தேவன் நிறுவுவதாகக் கூறிய புதிய உடன்படிக்கையாகும். சாத்தான், தீய ஆவிகள் மற்றும் அவைகளுக்கு சேவை செய்த தேசங்கள் மீதான இறுதி வெற்றியில் மேசியா இஸ்ரவேலை வழிநடத்துவார். அவர் சாத்தானை நசுக்கி, அவனைப் பின்பற்றும் அனைவரையும் நியாயந்தீர்ப்பார். இறுதியில், மேசியா எல்லாவற்றையும் புதியதாக ஆக்கி, தேவ ஜனங்களோடு பூமியை ஆட்சி செய்வார். தேவனுடைய மகிமை சிருஷ்டியை நிரப்பும், ஒவ்வொரு சிருஷ்டியும் அவரை முடிவில்லாமல் துதிக்கும்.

பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை சகாப்தங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் இருந்தபோதிலும், இந்த சகாப்தங்கள் ஒரு நீண்ட கதையின் அத்தியாயங்களைப் போல ஒன்றன் மீது ஒன்று கட்டமைக்கப்படுகின்றன என்பதை வேதாகமக் கதையின் இந்த சுருக்கம் நமக்குக் காட்டுகிறது. ஒன்றுக்கொன்று முரண்பட்டு, இடமாற்றுவது அல்லது ஒதுக்கி வைப்பது என்பதற்குப் பதிலாக, வரலாற்றின் இந்த ஒவ்வொரு கட்டமும் வேதாகமத்தின் வளர்ந்து வரும், ஒருங்கிணைக்கப்பட்ட கதைக்கு ஒட்டுமொத்தமாக பங்களிக்கிறது.

இதுவரை, பழைய ஏற்பாட்டு சகாப்த வளர்ச்சிகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய கதாபாத்திரங்களை நாம் கருத்தில் கொண்டோம், மேலும் ஒவ்வொரு சகாப்தமும் ஒரு ஒருங்கிணைந்த கதைக்களத்தில் மற்றவர்களுடன் இணைக்கப்பட்டிருப்பதைக் காட்டினோம். பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் முந்தைய சகாப்தங்களை பிற்கால வாசகர்களுக்குப் பயன்படுத்துவதைக் காண இப்போது நாம் தயாராக இருக்கிறோம்.

## எழுத்தாளர்கள்

இந்தப் பாடத்தின் தொடக்கத்தில், பழைய ஏற்பாட்டின் பயன்பாட்டை பின்வருமாறு சுருக்கமாகக் கூறினோம் என்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள்: "கடந்த காலத்திற்கு ஒருபோதும் திரும்ப வேண்டாம், ஆனால் கடந்த காலத்தை ஒருபோதும் மறக்க வேண்டாம்." நாம் கடந்த காலத்தில் வாழவில்லை, அதற்காக நாம் ஒருபோதும் முந்தைய காலங்களில் வாழ்வதைப் போல சிந்திக்கவோ, நடந்து கொள்ளவோ அல்லது உணரவோ கூடாது. ஆனால் நாம் கடந்த காலத்தை உள்ளடக்கிய ஒரு கதையின் ஒரு பகுதியாக இருக்கிறோம். பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களுக்கு இது நன்றாகத் தெரியும். ஒரே உண்மையான தேவன் காலப்போக்கில் ஒரே உண்மையான மதத்தின் மூலம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தன்னை வெளிப்படுத்தி வருகிறார் என்பதை அவர்கள் அங்கீகரித்தனர். கடந்த காலத்தில் தேவன் சொன்ன, செய்த காரியங்கள் காலம் முழுவதும் அவருடைய ஜனங்களை வழிநடத்தும் என்பதே இதன் பொருள். இதன் வெளிச்சத்தில், பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டதை தவறாமல் எடுத்து, அதை தங்கள் காலத்திற்குப் பயன்படுத்தினார்கள். இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: பழைய ஏற்பாட்டில் ஆறு முக்கிய உடன்படிக்கை சகாப்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் ஆதாம், நோவா மற்றும் ஆபிரகாம் ஆகிய மூன்று ஆரம்பகால சகாப்தங்களைப் பற்றிய நமது தகவல்கள் அனைத்தும் மோசே, தாவீது மற்றும் புதிய உடன்படிக்கையின் பிந்தைய சகாப்தங்களில் எழுதப்பட்ட வேத புத்தகங்களிலிருந்து வருகின்றன.

பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் எழுத்துக்களில் சேர்த்த இரண்டு பொதுவான கூறுகளை நாம் கருத்தில் கொள்வோம், அவை சகாப்த வளர்ச்சிகளைப் பற்றிய அவர்களின் புரிதலை வெளிப்படுத்தின. முதலாவதாக, பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கடந்த காலத்தைப் பற்றி எழுதியதைக் காண்போம். இரண்டாவதாக, அவர்கள் நிகழ் காலத்திற்காக எழுதினார்கள் என்பதைக் காண்போம். அதாவது, அவர்கள் தங்கள் சொந்த காலத்தில், தங்கள் சொந்த நிகழ்காலத்தில் வாழ்ந்த வாசகர்களுக்காக எழுதினார்கள். பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கடந்த காலத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள் என்ற உண்மையை முதலில் பார்ப்போம்.

## கடந்த காலத்தைப் பற்றி

பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் கடந்த கால நிகழ்வுகளை முதன்மையாகக் குறிப்பிடுகின்றன. ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய புத்தகங்களைக் கவனியுங்கள். மோசே தனது உடன்படிக்கை சகாப்தத்தின் போது இந்த புத்தகங்களை எழுதினார். ஆனால் ஆதியாகமத்தில் ஆதாம், நோவா, ஆபிரகாம் ஆகியோரின் உடன்படிக்கை சகாப்தங்களின்போது நடந்த சம்பவங்களை அவர் விவரித்தார். யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய புத்தகங்களில் பழங்கால வரலாற்றை எழுதவில்லை. ஆனால் அங்கும் புத்தகங்கள் எழுதப்படுவதற்கு முன்பு நடந்த நிகழ்வுகளில் கவனம் செலுத்தினார்.

பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் எஞ்சியவை தாவீதின் உடன்படிக்கை சகாப்தத்தில் எழுதப்பட்டன. மேலும் அவர்கள் தங்கள் வாசகர்களை கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்றனர். எடுத்துக்காட்டாக, யோபுவின் புத்தகம் பெரும்பாலும் தாவீது சகாப்தத்தின் முடியாட்சி காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் இது ஆபிரகாமிய சகாப்தத்தில், முடியாட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்பே நடந்த நிகழ்வுகளை தெரிவிக்கிறது. யோசுவா, நியாயாதிபதிகள், ரூத் ஆகிய புத்தகங்கள் தாவீதின் உடன்படிக்கையின் காலத்தில் எழுதப்பட்டன, ஆனால் அவை மோசேயின் சகாப்தத்தின் முடிவில், தாவீது ராஜாவாவதற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்பு நடந்த சம்பவங்களை அறிவித்தன. சாமுவேல், ராஜாக்கள், நாளாகமங்கள், எஸ்றா, நெகேமியா, எஸ்தர் ஆகிய புத்தகங்கள் முதன்மையாக தங்கள் வாசகர்களுக்கு கடந்த காலத்தில் நடந்த சமீபத்திய நிகழ்வுகளைக் குறிக்கின்றன. ஏசாயா முதல் மல்கியா வரையிலான பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்கள் அனைத்திற்கும் இது பொருந்தும். தீர்க்கதரிசிகள் முதலில் தீர்க்கதரிசன உரைகள் மற்றும் செயல்கள் மூலம் ஊழியம் செய்தனர், பின்னர் தங்கள் சமகால வாசகர்களை விரிவுபடுத்துவதற்காக தங்கள் ஊழியங்களை பதிவு செய்தனர். எனவே, அவர்களின் புத்தகங்கள் பெரும்பாலும் தீர்க்கதரிசன காரியங்கள் மற்றும் ஏற்கனவே வழங்கப்பட்ட உரைகளின் பதிவுகளாக இருந்தன. அதுபோலவே, நீதிமொழிகள், சாலொமோனின் உன்னதப்பாட்டு, பிரசங்கி ஆகியவையும் அண்மைக் காலத்தின் இறையியல் பிரதிபலிப்புகளாக இருந்தன.

பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கடந்த காலத்தைப் பற்றி எழுதினார்கள் என்பதை இப்போது நாம் புரிந்துகொள்கிறோம், அவர்கள் நிகழ்காலத்திற்காக, அதாவது தங்கள் சொந்த சமகால வாசகர்களுக்காக எழுதினார்கள் என்ற உண்மையைப் பார்ப்போம்.

## நிகழ் காலத்திற்கு

> வேதாகம எழுத்தாளர்கள் வேதாகமத்தை எழுதத் தொடங்கியபோது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக எழுதினார்கள். அவர்கள் எழுத்தின் மீதான அக்கறையில் எழுதவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் மக்களின் கற்றல், வழிகாட்டுதல் மற்றும் கட்டமைப்பிற்கான தேவையைப் பூர்த்தி செய்ய எழுதினார்கள். இந்த காரணத்திற்காக, ஒவ்வொரு புத்தகத்தின் பின்னாலும் ஒரு நோக்கம் இருந்தது. ஆவியானவரின் ஏவுதல் என்பது வெறுமனே ”உட்கார்ந்து எழுதுதல்” அல்ல. மாறாக ”எழுத வேண்டும்” என்கிற தேவை இருந்தது. அதனால்தான் ஒவ்வொரு எழுத்தாளரும் மக்களுக்குப் புரியும் வகையில் தகவல்களைத் தர வேண்டியதன் அவசியத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டார்கள்.
>
> – Dr. காசன் காலப், மொழிபெயர்ப்பு

> வேதாகம ஆசிரியர்கள் தாங்கள் எழுதும் வாசகர்களின் சூழ்நிலைகளை உன்னிப்பாகக் கவனித்தனர். அதற்குள் அதிகம் செல்வது நமக்கு அவசியமற்றது. அவை பிற்கால



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வாசகர்களுக்கு எதையும் அர்த்தப்படுத்தாமல் அசல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன என்று நாம் சொல்ல விரும்பவில்லை. ரோமர் 15:4-ல் எழுதப்பட்டவை அனைத்தும் நம்முடைய ஊக்கத்திற்காக எழுதப்பட்டவை என்று பவுல் கூறுவதை நாம் அறிவோம். ஆனாலும், வேதாகம எழுத்தாளர்கள் தாங்கள் எழுதும் மக்களின் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதில் உன்னிப்பாக கவனம் செலுத்தினார்கள்... எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் அப்போதுதான் எகிப்தை விட்டு வெளியேறிய ஒரு குழுவினருக்கு எழுதப்பட்டது. பூமியில் இருந்த மிகவும் வலிமையான சாம்ராஜ்ஜியத்தை அவர்கள் கோபப்படுத்தினார்கள். அவர்கள் மற்ற எதிரிகளுடன் போரிட வேண்டிய ஒரு நாட்டிற்குச் செல்லத் தயாராகி வந்தனர். அவர்கள் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும், எனவே ஆதியாகம புத்தகம் எல்லாவற்றையும் செய்த, எல்லா தேசங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும், முற்பிதாக்களுக்கு வாக்குறுதிகளை அளித்து அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் தேவனுடன் தொடங்குகிறது. இஸ்ரவேல் பயப்படத் தேவையில்லை... ஆகவே, அசல் வாசகர்களின் சூழ்நிலைகளை நாம் அறிந்தால், வேதம் என்ன சொல்கிறது என்பதை மட்டுமல்ல, அது ஏன் சொல்கிறது என்பதைப் பார்க்க நமக்கு உதவுகிறது. பின்னர், எகிப்தை விட்டு வெளியேறிய பிறகு வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களுக்கு இணையான சூழ்நிலைகளை நாம் எங்கே எதிர்கொள்கிறோம் என்பது போன்ற கேள்விகளைக் கேட்கத் தொடங்கலாம். ... தேவன் ஒரு மேய்ப்பனாகத் தம்முடைய ஜனங்களை எப்படிக் கவனித்துக்கொள்கிறார், நம்முடைய தேவைகளுக்கு இரக்கம் காட்டுகிறார் என்பதை நாம் பார்க்கத் தொடங்குகிறோம்.
>
> — Dr. ஜிம்மி அகன்

வேதாகமத்தின் ஆசிரியர்கள் கடந்த காலம் வேதாகம விசுவாசத்தின் இயல்பான வளர்ச்சியின் முந்தைய கட்டங்களைக் குறிக்கிறது என்பதைப் புரிந்துகொண்டனர். ஆனால் அவர்கள் தங்கள் காலத்தில் வாழ்ந்த வாசகர்களுக்கு முதலில் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டனர். எனவே, அவர்கள் தங்கள் அசல் வாசகர்களின் வாழ்க்கையை இணைக்கும் வழிகளில் கடந்த காலத்தைப் பற்றி எழுதினார்கள். வரலாற்று நபர்கள், செயல்கள்,

சொற்கள், நிறுவனங்கள் மற்றும் பல இந்த வரலாற்று தலைப்புகளை தங்கள் வாசகர்களின் வாழ்க்கையுடன் இணைக்கும் வழிகளில் அவர்கள் முன்னிலைப்படுத்தினர். பெரும்பாலும், பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் அசல் வாசகர்கள் இந்த இணைப்புகளை ஏற்படுத்த வேதாகம ஆசிரியர்கள் பின்பற்றிய இலக்கிய மரபு நெறிகளை பற்றி நன்கு அறிந்திருந்தனர். எனவே, ஆசிரியர்கள் பொதுவாக இந்த இணைப்புகளை விளக்க அக்கறை காட்டவில்லை. மற்ற நேரங்களில், ஆசிரியர்கள் கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான தொடர்புகளை சுட்டிக்காட்டும் சிறிய தடயங்களை வழங்கினர். இன்னும் சில பகுதிகளில், வேதாகம ஆசிரியர்கள் தங்கள் வாசகர்களுக்கு கடந்தகாலம் எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பார்க்க உதவும் வகையில் நேரடி விளக்கங்களை வழங்கினர்.

பழைய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் கடந்த காலத்தை தங்கள் நிகழ்கால வாசகர்களுடன் இணைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்ததைப் போலவே, நவீன கிறிஸ்தவர்கள் கடந்த காலத்தைப் பற்றிய அந்த எழுத்துக்களை நம்முடன் இணைக்க வேண்டும். ஆம், நவீன பயன்பாடு நம் நாளில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றியதாகும். ஆனால் அது எப்போதும் கடந்த கால வழிகளை அடிப்படையாகக் கொண்டது.

நவீன உலகில் வாழும் தேவனுடைய மக்களாக, நம்முடைய விசுவாசம் நீண்ட காலத்திற்கு முன்பு தேவன் வெளிப்படுத்தியவற்றுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தைக் கையாளும் பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் நவீன பயன்பாட்டிற்கு தயாராக அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். நாம் புதிய ஏற்பாட்டு புத்தகங்களைப் பயன்படுத்தும்போது கூட, நாம் இன்னும் கடந்த காலத்தைப் பார்க்கிறோம். இப்போது, வெளிப்படுத்தின விசேஷம் போன்ற சில புத்தகங்கள் எதிர்காலத்தை மையமாகக் கொண்டுள்ளன. ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் கூட அதன் எழுத்தாளரான யோவான் கடந்த காலத்தில் தனது அசல் வாசகர்களுக்குப் பயன்படுத்திய தரிசனங்களின் பதிவாகும். வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகமும் ஏதோ ஒரு விதத்தில், கடந்த காலத்தில் தேவன் என்ன செய்தார் என்பதில் கவனம் செலுத்துகிறது. எனவே, அந்த புத்தகங்களை நவீன உலகில் பயன்படுத்த, நாம் கடந்த காலத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த கட்டத்தில், சகாப்த வளர்ச்சிகள் பற்றிய நமது விவாதம் பழைய ஏற்பாட்டு சகாப்த வளர்ச்சிகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய கதாபாத்திரங்கள் மற்றும் வேதாகமத்தின் ஒருங்கிணைந்த கதைக்களம் மற்றும் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் சமகால வாசகர்களுக்கு முந்தைய சகாப்தங்களைப் பயன்படுத்தினார்கள் என்ற உண்மையை உள்ளடக்கியது. எனவே, வேதாகம ஆசிரியர்கள் கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையில் வரைந்த தொடர்புகளின் வகைகளில் கவனம் செலுத்த இப்போது நாம் தயாராக இருக்கிறோம்.

# தொடர்புகள்

பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையில் வரைந்த மூன்று வகையான தொடர்புகளைப் பற்றிப் பேசுவோம். முதலாவதாக, அவர்கள் தங்கள் வாசகர்களுக்கு அவர்களின் நம்பிக்கையின் வெவ்வேறு பரிமாணங்களுக்கான வரலாற்று பின்னணிகளை வழங்கினர். இரண்டாவதாக, அவர்கள் மாதிரிகளை தங்கள் வாசகர்கள் பின்பற்றவும் நிராகரிக்கவும் வழங்கினர். மூன்றாவதாக, அவர்கள் தங்கள் வாசகர்களின் அனுபவங்களின் எதிர்பார்ப்புகளை வழங்கினர். வேதாகம ஆசிரியர்கள் தங்கள் வாசகர்களுக்கு வரலாற்றுப் பின்னணிகளை எவ்வாறு வழங்கினார்கள் என்பதை முதலில் பார்ப்போம்.

## பின்னணிகள்

பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பெரும்பாலும் தங்கள் வாசகர்களின் தற்போதைய அனுபவங்களின் பின்னணி அல்லது தோற்றத்தை விளக்குவதன் மூலம் கடந்த காலத்தின் பொருத்தத்தைக் காட்டினர். எடுத்துக்காட்டாக, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நடந்த திருமணத்தை மோசே விவரித்த பிறகு, இந்த நிகழ்வை தனது வாசகர்களுடன் நேரடியாக இணைக்க அவர் தனது கதையை இடைநிறுத்தினார். ஆதியாகமம் 2:24-ல் மோசேயின் வார்த்தைகளை கவனிக்கவும்:

> இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி 2:24).

இந்த வசனத்தில், ஆதாமின் உடன்படிக்கை சகாப்தத்தின் ஒரு அம்சம் மோசேயின் சகாப்தத்தில் வாசகர்களுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதை மோசே விளக்கினார். குறிப்பாக, ஆதாம் ஏவாளின் திருமணம் மோசேயின் காலம் வரை நீடித்த திருமண நெறியை நிறுவியது.

மோசே இந்த நிகழ்வை தனது அசல் வாசகர்களுக்கு பின்னணியாகப் பயன்படுத்தினார் என்பதைக் கண்டவுடன், நாமும் அதை அதே வழியில் நம்முடன் இணைக்க முடியும். ஆதாம் மற்றும் ஏவாளின் திருமணம் பண்டைய இஸ்ரவேலில் திருமணத்தின் பின்னணியாக இருந்தது, மேலும் இது நம் காலத்தில் திருமணத்தின் பின்னணியாகவும் இருக்கிறது.

மற்ற நேரங்களில், வேதாகம ஆசிரியர்கள் வரலாற்று நபர்களுடைய தேவ ஒப்புதல் அல்லது மறுப்பை வெளிப்படுத்தும் வழிகளில் பின்னணிகளைப் பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக, ரூத்தின் புத்தகம் ரூத், நகோமி அல்லது போவாஸ் ஆகியோரிடம் எந்தக் குற்றத்தையும் காணவில்லை, மேலும் அவர்கள் தேவனுடைய முழு அங்கீகாரத்தைப் பெற்றிருந்தனர் என்பதைக்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காட்டுகிறது. இதற்கான காரணத்தை நூலின் இறுதியில் காண்கிறோம். ரூத் 4:21-22-ல் புத்தகம் முடியும்போது வரும் வம்சவரலாறை கவனிக்கவும்:

> சல்மோன் போவாசைப் பெற்றான்; போவாஸ் ஒபேதைப் பெற்றான். ஒபேத் ஈசாயைப் பெற்றான்; ஈசாய் தாவீதைப் பெற்றான் (ரூத் 4:21-22).

இந்த வம்ச வரலாறானது போவாஸ் தாவீது ராஜாவினுடைய நேரடி மூதாதையர் என்பதைக் காட்டுகிறது. இந்த முடிவு மோசேயின் சகாப்தத்தின் நிகழ்வுகளை தாவீதின் உடன்படிக்கையின் காலத்தில் வாழ்ந்த அசல் வாசகர்களின் காலத்துடன் இணைக்கிறது.

எல்லா வகையிலும், தாவீதின் அரசாட்சியின் சட்டபூர்வத்தன்மை குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டன, ஏனெனில் அவர் மோவாபிய ஸ்திரீயான ரூத்திலிருந்து வந்தவர். ஆனால் ரூத்தின் கதையானது அவளை இஸ்ரவேலில் சேர்ப்பது எல்லா விதத்திலும் முன்மாதிரியாக இருந்தது என்பதையும், தேவன் அவளை முழுமையாக அங்கீகரித்தார் என்பதையும் நிரூபிக்கிறது. இவ்விதமாக, ரூத்தின் புத்தகம் தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாகத் தேர்ந்தெடுப்பதை வலுப்படுத்தும் பின்னணியை வழங்கியது.

மீண்டும், நவீன பயன்பாட்டில், ரூத்தின் ஆசிரியர் தனது அசல் வாசகர்களுக்காக கட்டிய பாலத்தை விரிவுபடுத்தும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. ரூத்துக்கு தேவன் அளித்த அங்கீகாரம் தாவீதின் காலத்தில் தாவீதின் வம்சத்தின் நியாயத்தன்மையைக் காட்டியது போலவே, நம் காலத்தில் தாவீதின் மிகப் பெரிய வாரிசான இயேசுவின் அரசாட்சியை உறுதிப்படுத்தும் பின்னணியையும் இது வழங்குகிறது.

கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையில் ஆசிரியர்கள் வரைந்த இணைப்புகள் பின்னணிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், தங்கள் அசல் வாசகர்களைப் பின்பற்ற அல்லது நிராகரிக்க மாதிரிகளை முன்வைத்தன.

## மாதிரிகள்

> சில நேரங்களில் நாம் ஒரு வேதாகம கதையைப் படிக்கும்போது, ”இது ஒரு நல்ல முன்மாதிரியா அல்லது கெட்ட முன்மாதிரியா? என்கிற கேள்வியைக் கேட்பது வழக்கம். வேதத்தில் உள்ள இந்த நபர் செய்த அதே காரியத்தை நான் செய்ய வேண்டுமா, அல்லது அதிலிருந்து வேறு ஏதாவது செய்ய வேண்டுமா?” என்றும் கேட்போம். அந்த கேள்விக்கு பதிலளிப்பது வெவ்வேறு வேத பகுதிகளில் வித்தியாசமாக இருக்கலாம், ஆனால் இங்கே நிறைய வேதாகம



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கதைகளுக்கு பொருந்தும் ஒரு மிக முக்கியமான கொள்கை உள்ளது, அதையே நான் விளைவுகளின் விதி என்று அழைக்க விரும்புகிறேன், அது கதையின் முடிவைப் பார்ப்பது மற்றும் அந்த நபருக்கு என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதாகும். அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்களா அல்லது தேவனின் நியாயத்தீர்ப்பைப் பெறுகிறார்களா? என்று பார்ப்போம். யாராவது நமக்கு ஒரு நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறார்களா அல்லது ஒரு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்துகிறார்களா என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.
>
> – Dr. பிலிப் ரைகென்

தாவீதின் சகாப்தத்தில் வாழ்ந்த அசல் வாசகர்களுக்காக மோசேயின் சகாப்தத்தின் நிகழ்வுகளைப் பதிவுசெய்த யோசுவாவின் புத்தகத்திலிருந்து மாதிரிகளின் இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம். யோசுவாவின் ஆசிரியர் யோசுவா 2-6 இல் எரிகோவுக்கு எதிரான போரில் இஸ்ரவேலின் செயல்திறனில் ஒரு நேர்மறையான மாதிரியையும், யோசுவா 7 இல் ஆயிக்கான போரில் அவர்களின் செயல்திறனில் எதிர்மறையான மாதிரியையும் வழங்கினார்.

எரிகோ போரின் நீண்ட குறிப்பில், யோசுவாவோ, அவருடைய வேவுகாரர்களோ அல்லது இஸ்ரவேலின் சேனையோ தேவனுடைய சித்தத்திற்கு மாறாக எதையும் செய்ததாக எந்த குறிப்பும் இல்லை. கில்காலில் எரிகோவிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் விருத்தசேதனம் செய்வதன் மூலம் அவர்கள் தங்கள் முழு பக்தியை தேவனுக்குக் காண்பித்தனர், மேலும் அவர்கள் லேவியரையும் ஆசாரியர்களையும் பின்தொடர்ந்தனர், அவர்கள் தேவன் கட்டளையிட்டபடி பாடி, கூச்சலிட்டு, எக்காளங்களை ஊதி நகரத்தைச் சுற்றி வந்தனர். எனவே, யோசுவாவின் ஆசிரியர் எரிகோவின் கதையை யோசுவா 6:27 இல் உள்ள இந்த நேர்மறையான வார்த்தைகளுடன் முடித்தார்:

> எனவே கர்த்தர் யோசுவாவோடே இருந்தார், அவருடைய புகழ் தேசம் முழுவதும் பரவியது (யோசுவா 6:27).

ஆனால் யோசுவா 7:1-ல் ஆயிக்கான போர் பற்றிய குறிப்பு எவ்வாறு தொடங்குகிறது என்பதை கவனிக்கவும்:

> இஸ்ரவேல் புத்திரர் சாபத்தீடானதிலே துரோகம்பண்ணினார்கள் (யோசுவா 7:1).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வசனம் எரிகோ போரில் இஸ்ரவேலின் நேர்மறையான மாதிரியையும் ஆயி போரில் இஸ்ரவேலின் எதிர்மறையான மாதிரியையும் ஒப்பிடுகிறது.

இஸ்ரவேல் முதன்முதலில் ஆயி என்னும் சிறிய நகரத்தைத் தாக்கியபோது, இஸ்ரவேலரின் பெரும் படை தோற்கடிக்கப்பட்டது, ஏனென்றால் இஸ்ரவேலரான ஆகான் போரின் அனைத்துக் கொள்ளைகளும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்ற தேவ கட்டளைக்கு எதிராக எரிகோவிலிருந்து பொருள்களைத் திருடினான். யோசுவாவும் இஸ்ரவேலும் முதன்முதலில் தேவனால் எதிர்கொள்ளப்பட்டு, தங்கள் பாவத்திற்காக மனந்திரும்பி, ஆகானுக்கும் அவன் குடும்பத்தாருக்கும் கடுமையான நியாயத்தீர்ப்பு வழங்கும் வரை போரில் ஆயியை தோற்கடிக்கவில்லை.

எரிகோ மற்றும் ஆயி போர்களுக்கு இடையிலான வேறுபாடு யோசுவாவின் வாசகர்களுக்கு பின்பற்ற ஒரு நேர்மறையான மாதிரியையும் நிராகரிக்க ஒரு எதிர்மறையான மாதிரியையும் வழங்கியது. இந்த மாதிரிகளைக் கவனிப்பதன் மூலம், தாவீதின் சகாப்தத்தின் அசல் வாசகர்கள் தங்கள் ராஜாக்களை போரில் எவ்வாறு பின்பற்றுவது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

நிச்சயமாக, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம் யோசுவாவைப் போல இனி சரீர ரீதியான போரை நடத்துவதில்லை, ஏனென்றால் புதிய ஏற்பாடு நம்மை ஆவிக்குரிய போருக்கு மட்டுமே அழைக்கிறது. இருப்பினும், நவீன பயன்பாட்டில் ஆன ஆவிக்குரிய போரில் ஈடுபடுவதற்கான சரியான வழிகளைக் கற்றுக்கொள்வதற்காக அதே நேர்மறை மற்றும் எதிர்மறை மாதிரிகளின் இணைப்பை விரிவுபடுத்துகிறோம். எளிமையாகச் சொல்வதானால், யோசுவா எரிகோவில் இருந்ததைப் போல நாமும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டும், ஆகான் ஆயியில் செய்ததைப் போல அவரது கட்டளைகளைப் புறக்கணிப்பதைத் தவிர்க்க வேண்டும். நிச்சயமாக, இந்த பரந்த நவீன பயன்பாடுகள் தொடர்பான எண்ணற்ற விவரங்கள் உள்ளன. ஆனால் யோசுவாவின் ஆசிரியர் தனது அசல் வாசகர்களுக்கு தந்த இணைப்புகள் அனைத்தும் நம் சொந்த சூழ்நிலைகளுக்கு அந்த விவரங்களை தீர்மானிக்க உதவும் வழிகளில் நீட்டிக்கப்படலாம்.

> தெய்வீக வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும், பாவம் என்றால் என்ன போன்ற பல வழிகளில் வேதம் நமக்குக் கற்பிக்கிறது, சில நேரங்களில் நீ செய், அல்லது நீ செய்யக்கூடாது என்று நேரடியாகவும் தங்கள் வாழ்க்கையை, வாழ்ந்த உண்மையான மனிதர்களின் வரலாற்றையும் நமக்குக் கொடுப்பதன் மூலம் வேதம் நமக்கு போதிக்கிறது. அவற்றைப் படிக்கும்போது, அவர்களுடைய முன்மாதிரியிலிருந்து

நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நாம் அறிவோம். ”சகிப்புத் தன்மையினாலும் வேதவாக்கியங்களின் ஊக்கத்தினாலும் நமக்கு நம்பிக்கை உண்டாகும்படி, முற்காலத்தில் எழுதப்பட்டவை யாவும் நமக்குக் கற்பிப்பதற்காக எழுதப்பட்டவை” என்று ரோமர் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நாம் பின்பற்ற வேண்டிய நேர்மறையான எடுத்துக்காட்டுகள் நம்மிடம் உள்ளன, மேலும் நாம் தவிர்க்க வேண்டிய எதிர்மறை எடுத்துக்காட்டுகள் உள்ளன… தாவீது பத்சேபாளுடன் விபச்சாரம் செய்தபோது, அது தவறு என்று பத்துக் கட்டளைகளிலிருந்து நாம் அறிகிறோம்; நாத்தான் அவரைப் பாவம் செய்ததாகக் குற்றம் சாட்டியதால், நாம் அதை விவரிப்பிலிருந்து அறிவோம். நமக்கு வேறு அறிகுறிகள் உள்ளன. பொதுவாக ஒரு நல்ல முன்மாதிரியாகவும் தேவனுக்கு பிரியமாகவும் இருந்த ஒரு மனிதனின் மோசமான முன்மாதிரி இது என்பதை நாம் அறிவோம்… எனவே வித்தியாசத்தை அறிய நமக்கு எது உதவுகிறது? தேவனுடைய பிரமாணம், தெளிவான போதனைகள், கட்டளைகள் போன்றவைகளையும் அவைகளை செயல்படுத்தலையும் ஒன்றாக இணைக்க முடியும்.

– Dr. ஆண்ட்ரூ டேவிஸ்

சில நேரங்களில் நீங்கள் வேதாகமத்தைப் பார்க்கும்போது, ஒரு தனிப்பட்ட பாத்திரம் அல்லது அவரது வாழ்க்கை நாம் பின்பற்ற வேண்டிய ஒன்றா என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம் என்பது உங்களுக்கு தெரியும். நாம் பின்பற்றக்கூடிய ஒரே நபர் இயேசு மட்டுமே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர் மட்டுமே நமது விமர்சனத்தை முழுமையாகப் பெறுகிறவராக இருக்கிறார். மற்ற அனைவரையும் நாம் மிகவும் கவனமாக ஆராய வேண்டும். அவர்கள் வேதத்தில் இருப்பதற்கான காரணம் பொதுவாக நாம் பின்பற்றுவதற்கு முன்மாதிரியாக இருப்பதில்லை… ஆனால் நாம் பின்பற்றுவதற்கு ஒரு வாழ்க்கைப் பாடம் எப்போது கிடைக்கிறது, எப்போது இல்லை என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கும்போது, நீங்கள் சூழலைப் பார்க்க வேண்டும், அந்த செயல்களைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது, அந்த செயல்களின் விளைவுகள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவை ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்கு பங்களிக்கின்றனவா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும், ஆனால் முதன்மையாக வேதாகமத்தில் உள்ள தார்மீக கட்டளைகளைப் பார்த்து உங்கள் தீர்ப்பை வழங்க வேண்டும், இயேசுவைத் தவிர அனைவரும் சிறந்த உதாரணங்களாக இருக்க முடியாது. அவர் சொன்னதும் செய்ததும் நல்லதும் உண்மையும், அழகும் என்பதை நாம் அறிவோம். மற்றவர்கள் அனைவரும் வேதாகம ஒழுக்கத்தின் நுண்ணோக்கியின் கீழ் வருகிறார்கள்.
>
> – Dr. சாண்டர்ஸ் எல். வில்சன்

இறுதியாக, பின்னணிகள் மற்றும் மாதிரிகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் அசல் வாசகர்களின் சொந்த அனுபவங்களின் எதிர்பார்ப்புகளை இணைப்பதன் மூலம் கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான தொடர்புகளையும் வரைந்தனர்.

## எதிர்பார்ப்புகள்

வேதாகம எழுத்தாளர்கள் கடந்த காலத்தைப் பற்றி அடிக்கடி எழுதினார்கள், கடந்த கால நிகழ்வுகள் தங்கள் வாசகர்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளுடன் எவ்வாறு மிகவும் ஒத்திருந்தன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்த வகை இணைப்பு "முன்னறிவிப்பு" எனப்படும் இலக்கிய சாதனத்தைப் போன்றது. முன்னறிவிப்பில், ஒரு எழுத்தாளர் ஒரு கதையின் முந்தைய விவரங்களை பிற்கால விவரங்களை எதிர்பார்க்கும் வழிகளில் முன்வைக்கிறார். வேதாகம எழுத்தாளர்கள் சில நேரங்களில் இதே போன்ற நோக்கங்களுடன் கடந்த காலத்தைப் பற்றி எழுதினார்கள். கடந்த கால நிகழ்வுகளை வாசகர்களின் அனுபவங்களை எதிர்பார்க்கும் வகையில் எழுதினர்.

ஆதியாகமம் 12:10-20-ல் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆபிரகாம், எகிப்தில் தங்கியிருந்த கதையைப் பற்றிய மோசேயின் கதையில் ஒரு நன்கு அறியப்பட்ட எதிர்பார்ப்பு காணப்படுகிறது. ஆபிரகாமின் சகாப்தத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றிய உண்மையை மோசே சொன்னார், ஆனால் ஆபிரகாமுக்கும் தங்களுக்கும் இடையிலான பல ஒற்றுமைகளை அடையாளம் காண அவரது அசல் வாசகர்களுக்கு உதவிய வழிகளில் அவர் கதையை விளக்கினார். உதாரணமாக, மோசேயின் அசல் வாசகர்கள் பஞ்சத்தின் காரணமாக எகிப்தில் இருந்ததைப் போலவே, ஆபிரகாம் பஞ்சத்தின் காரணமாக எகிப்துக்குச் சென்றார். மோசேயின் காலத்தில் எகிப்தியர்கள் இஸ்ரவேலர்களை

அநியாயமாக அடிமைகளாக வைத்திருந்ததைப் போலவே, பார்வோன் எகிப்தில் சாராவை தன் அரண்மனைக்குள் அழைத்துச் செல்வதன் மூலம் ஆபிரகாமுக்கு அநியாயம் செய்தான். பார்வோனின் குடும்பத்தின் மீது வாதையை அனுப்பி தேவன் ஆபிரகாமை விடுவித்தார், எகிப்து மற்றும் பார்வோனுடைய வீட்டின் மீது வாதைகளை அனுப்பி மோசேயின் நாளில் இஸ்ரவேலை விடுவித்தார். பார்வோன் ஆபிரகாமை பெரும் செல்வத்தோடு அனுப்பினான்; மோசேயின் காலத்தில் யாத்திராகமத்தில் பார்வோனும் எகிப்தியரும் இஸ்ரவேலரை எகிப்தின் செல்வத்தோடு அனுப்பி வைத்தார்கள்.

ஆபிரகாமின் அனுபவம் தங்கள் சொந்த அனுபவத்தை எதிர்பார்த்தது என்பதைக் காட்ட மோசே இந்த ஒப்பீடுகளை வரைந்தார். எகிப்தில் அவர்கள் இருந்த காலத்தை நினைத்துப் பார்ப்பதை மறக்கவும், அவர்களின் விடுதலையை அவர்களுக்காக தேவனுடைய ஒரு மகத்தான செயலாகப் பார்க்கவும் மோசே தனது அசல் வாசகர்களை ஊக்குவிக்க விரும்பினார்.

மீண்டும், நவீன பயன்பாட்டில், ஆபிரகாமின் வாழ்க்கையிலிருந்து மோசே கட்டிய பாலத்தை அவரது அசல் வாசகர்களுக்குக் காட்டுவதும், அந்த பாலத்தை நமது நவீன வாழ்க்கைக்கு விரிவுபடுத்துவதும் நமது பணியாகும். எடுத்துக்காட்டாக, தேவன் முன்பு ஆபிரகாமை விடுவித்து, பின்னர் இஸ்ரவேலரை விடுவித்ததைப் போலவே, கிறிஸ்து தீமையின் கொடுங்கோன்மையிலிருந்து நம்மை விடுவித்தார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. இது போன்ற ஒற்றுமைகள் மூலம், ஆபிரகாமின் எகிப்து பயணம், நவீன கிறிஸ்தவர்கள் நம்முடைய விசுவாசத்தையும் தேவனுக்குச் செய்யும் சேவையையும் புரிந்து கொள்ள வேண்டிய வழிகளையும் எதிர்பார்க்கிறது.

நாம் வேதாகமத்தைப் பயன்படுத்தும் போதெல்லாம், வேதத்தின் காலத்திற்கும் நம் நாளுக்கும் இடையில் நடந்த சகாப்த வளர்ச்சிகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பின்னணிகள், மாதிரிகள் மற்றும் எதிர்பார்ப்புகள் மூலம் வரைந்த இணைப்புகள் இந்த வரலாற்று சகாப்தங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்க உதவும் வடிவங்களை வழங்குகின்றன.

# முடிவுரை

நவீன பயன்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டு சகாப்தங்கள் பற்றிய இந்த பாடத்தில், பழைய ஏற்பாட்டு வரலாற்றின் சகாப்த பிரிவுகளை அவற்றின் வகைகள், சகாப்தங்களின் பொதுவான சுருக்கம் மற்றும் இந்த பிரிவுகளின் தாக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தோம். இந்த பிரிவுகளுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இடையிலான சகாப்த வளர்ச்சிகளை அவற்றின் நிலையான பாத்திரங்கள், ஒருங்கிணைந்த கதைக்களம், வேதாகம எழுத்தாளர்களின் முந்தைய சகாப்தங்களின் பயன்பாடு மற்றும் நமது பயன்பாட்டிற்கு உதவும் சகாப்தங்களுக்கு இடையிலான தொடர்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் நாம் பரிசீலித்துள்ளோம்.

நாம் பார்த்தபடி, தேவனுடைய உடன்படிக்கைகள் வேதாகம வரலாற்றை வெவ்வேறு இறையியல் நோக்குநிலைகளைக் கொண்ட முக்கிய சகாப்தங்களாகப் பிரித்தன. எனவே, கடந்த கால வழிகளுக்குத் திரும்புவதன் மூலம் நம் நாளில் தேவனுக்கு சேவை செய்ய நாம் ஒருபோதும் முயற்சிக்கக்கூடாது. ஆனால் கடந்த காலத்தில் தேவன் வெளிப்படுத்தியதை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம். இறையியல் கருப்பொருள்கள் ஒரு யுகத்திலிருந்து அடுத்த யுகத்திற்கு இயல்பாக வளர்ந்த வழிகளை நாம் கணக்கிடும்போது, முந்தைய உடன்படிக்கை யுகங்களில் தேவன் வெளிப்படுத்திய அனைத்தும் நம் யுகத்தில், கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையின் யுகத்தில் கூட அவருக்கு சேவை செய்வதைப் பற்றி நமக்குக் கற்பிக்க நிறைய உள்ளன என்பதைக் காண்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.